ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

பல்கோடிகாலம் பாடுபட்டுப் பல தவம்புரிந்து முன்னாளில் ஸாதித்த காரியத்தைத் தற்காலத்திய சிலர் வெகு சுலபமாக ஒரே நிந்தா வாக்கியத்தால் ஸாதித்துவிடலாமென்று நினைக்கிறார்கள். இவ்வளவு எளிதான ஸாதனம் ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு, ராவணன், முதலியவர்களுக்குத் தெரியாமற்போய்விட்டது. அவர்களிதைத் தெரிந்துகொண்டிருந்தால் வீணில் கஷ்டப்பட்டுக் காயக்கிலேசம்செய்து கடுந்தவம்புரிந்திருக்க மாட்டார்கள். நிந்தைசெய்தே காரியத்தைஸாதித்திருப்பார்கள். அப்படிக் கில்லாமல் அவர்கள் தவம் புரிந்தவரலாற்றை சரித்திரமூலமாய்க் கேட்டால் அது மிக்கக்கடினமானதென்று எவனுக்கும்புலப்படாமற்போகாது. அந்த அஸுரர்களுக்கு ஒரு தேவதையின்மீது துவேஷமிருந்தாலும் மற்ற தேவர்களின் ஆராதனத்தைக்கைவிடமாட்டார்கள். தேவாலயாதிகளை தூஷிக்கமாட்டார்கள், இதர தேவர்களை ஆராதித்தும், எவ்வளவோ தபஸ் வித்தியையடைந்தும் அஸுரர்கள் ஏதோ சிலரிடம் கொண்ட துவேஷத்தால் முடிவில் தோல்வி அடைந்து பகவதபசாரத்திற்குப் பாத்திரமாகிப் பரிதபித்தார்களேயன்றி க்ஷேமத்தை அடையவில்லை. அப்படியிருக்கையில் தற்காலத்திய சிலர்ஒரு தேவதையையும் நம்பாமல் ஒருதவமும் செய்யாமல் ஒரு சித்தியும் பெறாமல் நிந்திப்பதையே பெரிய பிரம்மாஸ்திரமாகக்கொண்டு பிரபஞ்சத்தையே மாற்றித் திருத்திவிடத் துணிவது ஸாஹஸத்திலும் ஸாஹஸமே. கட்டுக்கொள்ளாத இவர்கள் மனதைத் தம்வசமாக்கிக்கொண்ட தேவதைகளும் அவர்களையே பின்பற்றும் ஸநாதனதர்மிகளும் இந்தப் பூச்சாண்டிக்குப் பயந்துவிடுவார்களா? தற்காலத்தியவர்கள் தன்மனதையாவது கட்டுப்படுத்தச்சக்தியுள்ளவர்களா என்பதைக் கவனித்தால் சக்தியுள்ளவராக ஒருவரும் தென்படவில்லை. இவர்கள் ஒருதடவை நினைத்தபடி மற்றொருதடவை நினைக்கிறார்களா? ஒருதரம் பேசினபடி மற்றொருதரம் பேசுகிறார்களா? பிறரைத் தூஷிப்பதில் பிரசித்திபெற்றவர்களுள் சிலர் காங்கிரஸ்ஸில் சேர்ந்து ராஜீயத்தில் மாறி, நாஸ்திகத்தில் முடிவுபெறுகிறார்கள். இவர்களது எந்தநிலைமையை உறுதியாக நம்பிஜனங்கள் பின்பற்றுவார்கள். அவ்வப்பொழுது மனதில் பட்டவதையெல்லாம் அப்படியே வெளிப்படுத்திவிடுவதையும், நடத்திவிடுவதையும் குணமென்றே சிலர் புகழ்ந்துபேசிவிடுகிறார்கள். அப்படியானால் பிறருக்கு துரோஹம்செய்யக் கருதியவர்களும் பிறர் சொத்தை அந்யாயவழியில் அபஹரிப்பவர்களும், ராஜாங்கத்தாரால் சிக்ஷிக்கப்படுவது சரியல்லவென்றேற்படும். அப்படி எவரேனும் நினைப்பாரா? அதுபோல் முன்னுக்குப் பின்விரோதமாகவே பேசிக்கொண்டும், கார்யத்தில் நடந்துகொண்டுமிருப்பதைக் குணமென்று கூறுவது உசிதமாகமாட்டாது. அதனால் யாவரும் ஒரு கடவுளுக்கடங்கி, அவராணைக்குக் கட்டுப்பட்டு நடந்து சிரேயஸ்ஸை அடைவாராக. சுபம்

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-௵ கார்த்திகை௴ ௨௫௳

மூத்தவனை மூலையில் தள்ளலாமா?

ஒரு குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்தவனை பெருந்தன்மையில் வைத்துக்கொண்டாடவேண்டுவது மரியாதையேயன்றி மூலையில்தள்ளிவிடுவது மரியாதையாகுமா? மற்றபிராதாக்கள் ஜ்யேஷ்டர் குறைக்கப்படுவதை ஸஹிப்பார்களா? ஸஹிக்கவேமாட்டார்கள். அல்லாமலும் குறைப்பவனைச் சீர்குலையச்செய்திடுவார்களென்பது உலகமறிந்தவர் தெரிந்துகொண்டதே. பாரதமக்களின் சொத்துக்குப்பங்காளிகளான பிள்ளைகள்நான்குபேர்களாம். அங்ஙனமே நீதிநூலும்—

चत्वारो वित्तदायादा धर्माग्निनृपतस्करा: ।
ज्येष्ठपुत्रावमानेन त्रय: कुप्यन्ति सोदरा: ॥

"தர்மம், அக்கினி, அரசன், திருடன் ஆகிய நால்வரும் பணத்துக்குப் பங்காளிகள். ஜ்யேஷ்ட புத்திரனை அவமதித்தால் மற்ற மூன்று பங்காளிகளும் அவமதித்தவனிடம்கோபங்கொள்ளுவார்கள்" என்று தெரிவிக்கிறது. தர்மத்தை திரஸ்கரித்தவன் இருந்த தனத்தையும் அனுபவிக்கமுடியாது. புதிதாகத்தேடவும் முடியாது. ஒருவாறு தேடினாலும் தீக்கிரையாகிவிடும். அல்லது ராஜாங்கத்தாராலாவது அபஹரிக்கப்பட்டுவிடும். அல்லது திருடனாவது கொள்ளையிட்டுக்கொண்டுபோய்விடுவான். கொஞ்சநாளாக நம்பாரதபூமியில் தர்மமார்க்கத்தை தடைசெய்யப் பலர் முயன்றுவருவதால் பாரதநாட்டில் பலவிடங்களில் அக்னிபாதையேற்பட்டு சொத்துக்கள் அழிகின்றன. ராஜாங்கத்தாரோடு பலமான விரோதங்களேற்பட்டு இந்தியாசொத்துக்கள் அன்னியநாட்டுக்குச்செல்லுகின்றன. கொள்ளைக்காரர்கள் பலவிதத்திலும்கொள்ளையிடுகிறார்கள். தர்மத்தை தவிக்கவிட்டதாற்றான் இவ்வளவு தீங்கு நேர்ந்ததென்று தார்மிகர் நினைக்கின்றார். அவர்

நினைக்கின்றபடி நம்பாரதமக்கள் தர்மத்தைத்தழுவி நடந்துகொள்வார்களானால் திருடர்கள் தீவட்டிக்கொள்ளையடிக்கமாட்டார்கள். அக்கினிபாதை ஏற்படமாட்டாது. ராஜாங்கத்தாரும் ஒத்துவருவார்கள். இதைக்கொஞ்ச காலத்திலேயே கண்கூடாகக் காணலாம். தர்மத்தை தழுவி நடப்பதால் எவருக்குமுள்ள உரிமை குறைந்துவிடாது. இப்பொழுதும் நம்மிந்தியாவில் தர்மத்தைப் புறக்கணித்துப் பேசுகின்றவர்கள் எல்லோருக்கும் சம உரிமை இருப்பதாக வாயால்மாத்திரம் பேசுகிறார்களேயன்றி கிரியையில் காட்டவில்லை. சிலர் வாயால்கூடபேசவில்லை. தார்மிகர்மீது நிஷ்காரணமானத் துவேஷத்தால் அவரை நிந்திக்கிறார்களேதவிர வேறொன்றுமில்லை. தார்மிகரெனப்படுவோர் தாழ்க்கப்பட்டவரிடம் இரக்கம் பாராட்டவில்லையென்கிறார்கள். இரக்கம் பாராட்டியவர்கள் தாழ்க்கப்பட்டவருக்கு இவ்வளவுநாளாக என்னென்ன செய்துவிட்டார்கள். அவர்களைத் தொட்டுக்கொள்ளுவதாலும், அவர்பார்க்க உண்பதாலும், அல்லது அவர்களோடுசேர்ந்து ஒரே பந்தியிலோ, ஒரே பாத்திரத்திலோ சாப்பிடுவதாலும் என்ன செய்யப்பட்டதாகும். தனதுசொத்துக்களிலும் அவர்களுக்குச் சம உரிமைகொடுத்தார்களானால் பசியாரவாவது சாப்பிடுவார்கள். வீணான துவேஷத்தைக் கிளப்பிவிட்டு அவர்களை கஷ்டப்படுத்தி வைக்கிறார்களேயன்றி வேறில்லை. எல்லாப்பிராணிகளிடத்திலும் சம உரிமைபாராட்டும்படியான தாராளமாகிய மனப்பான்மையை பாராட்டும்படியான பாக்கியம் நம்பாரதமக்களுக்கு வந்துவிட்டால் அதைவிட மேலானது ஏதேனுமுண்டோ. அதற்கெல்லாம் மூலகாரணம் தர்மமேதவிர வேறில்லை. அத்தகைய சிறந்த தர்மத்தைத் தள்ளிவிடலாமா? ஒரு நாளுங்கூடாது. ஆகையால் யாவரும் அதையேபெரிதாகபாவித்து நடந்துகொண்டு சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

திருச்சி அத்வைதஸபையில் நடந்த உபந்யாஸங்களின் சுருக்கம்.

க்ருத்ஸ்நப்ரஸக்தியதிகரணம்.

(பிர்மஸ்ரீ போலகம் ஸ்ரீராமசாஸ்திரியார்.) 27-10-31

“ कृत्स्नप्रसक्तिर्निरवयवत्वशब्दकोपोवा ”

இது ப்ரம்மசூத்திரம் 2-வது அத்யாயம் முதல் பாதம் 9-வது அதிகாணம். இதில் ப்ரம்மத்தின்பரிணாமவாதம்கண்டிக்கப்படுகின்றது. சித்து. அசித்து. இது இரண்டையும் சரீரமாக உடைத்தான பகவான் ஒருவர் ஒன்றுதான் **विशिष्टाद्वैतम्** என்றுசிலர் கூறுகின்றனர். இவர்களும் பரிணாமவாதம் ஒப்புக்கொண்ட ஸாங்கியர்களும் இவ் வதிகரணத்தில் கண்டிக்கப்படுகின்றனர். இந்த தோஷம் நமது அத்வைதிகளின் மதத்தில் தான் வாராது. **आत्मनिचैवं विचित्राश्चहि** என்ற சூத்திரத்தினால் பரமார்த்தமாக ஸ்வப்பனத்தில் தோன்றும் பதார்த்தங்களால் அந்த ஜீவனுக்கு ஒருவிதமான கெடுதலும் எப்படிக் கிடையாதோ அவ்விதமே ப்ரம்மத்தில் கல்பிக்கப்பட்ட வஸ்துக்களால் ப்ரம்மத்திற்கு ஸ்வரூபத்திற்கு ஒருவிதமான கெடுதலும் கிடையாது. இதுதான் விவர்த்தவாதம். சூத்திரக்காரருக்கும் சம்மதம். ஸாங்கியர்கள் மதத்தில் ப்ரதானம்முழுவதும் மாறுகிறதா? அல்லது சிலபாகம் மாறுகிறதா? முழுவதும் மாறினால் காரணம்போய்விடும். பாதி மாறினால் அம்சம் அங்கீகரிக்கப்பட்டதாக ஆகும் இதையொட்டி விசிஷ்டாத்வைதமதத்தில் தோஷத்தைப் போக்கடிப்பதற்காகக் கடவுள் சரீரத்திற்கும் சரீரியான கடவுளுக்கும் அபேதத்தினால் **अभिन्ननिमित्तोपादानं** என்றுகூறும் சப்தத்திற்குக் கடவுள் சரீரமே உபாதானம் என்று கூறுகின்றனர். இதைக்காட்டிலும் கேவலம் நிமித்தமாக கடவுளையொப்பும்த்வைதிகள் மேலானவர். சூத்திரக்காரரால் **श्रुतेश्च शब्दमूलत्वात्** என்ற சூத்திரத்தினால் ஸ்வீகரிக்கப்பட்ட பரிணாம வாதம் ஆரோபதிருஷ்டியை அனுஸரித்ததாகும். பரமார்த்தமாய் அபவாத திருஷ்டியில் விவர்த்த வாதமே பொருத்தமாகும். திருஷ்டி மூன்று விதம். ஆரோபதிருஷ்டி மிச்ர திருஷ்டி- அபவாத திருஷ்டி என்று. ஆரோபதிருஷ்டியில் ஜகத்தில் ஸத்யத்வபுத்தியை அநுஸரித்து இந்த பரிணாமவாதமேயொழிய வாஸ்தவத்தில் விவர்த்தவாதந்தான் மேலானது.

மனோநியமநம்.

(பிர்மஸ்ரீ போலகம் சுந்தரேச சாஸ்திரிகள்.) 27-10-31

உலகத்தில் ஸகல ப்ராணிகளுக்கும் மனதை அடக்கவேண்டியது மிகவும் அவச்யம். இல்லாவிடில் எந்தக்கார்யமும் பயன்படாமல் போய்விடும். சிறியகாரியம் முதல் பெரியகாரியம் வரையில் மனது அடங்கியிருக்கவேண்டும். அதற்காகத்தான் பால்யத்திலேயே மனதைபடக்கப் பழக்கம்செய்வது மிகுந்த நலம். இளம்மூங்கிலையே வளைத்துவிட்டால் பிறகு அது பெரிதாகப் பல்லக்கிற்கு உபயோகப்படும். உலகத்தில் மனதை அடக்குகின்றவர்களுக்கு மிகுந்த கௌரவம் கொடுக்கப்படுகின்றது. தன் குடும்பமட்டில் மனதின் அடக்கமுள்ளவனுக்கே மிகுந்த பெருமை ஏற்படும்பொழுது, ஆத்மபர்யந்தம் மனதை அடக்கினால் அனுக்கு எவ்வளவு கௌரவம் இருக்கும் என்று கூறவேண்டியதில்லை. மனோநியமனத்தினால் கிடைக்கக்கூடாத வஸ்து கிடையாது. கீதையில் பகவானைப்பார்த்து அர்ஜுனன் **चञ्चलं हि मनःकृष्ण** என்று கேட்டதற்கு பகவான் **अभ्यासेन च कौन्तेय वैराग्येण चगृह्यते** என்றுகூறி அப்யியாஸம் வைராக்யம் என்ற இரண்டு ஸாதனங்களினால் மனோவசீகாரத்தைச் சொல்லுகிறார். யோகசூத்ரங்களிலும் மனதையடக்கும் முறை இவ்விதம் கூறப்பட்டுள்ளது. மனது அடக்கமுள்ளவனுக்கு சாபாதிகளின் ஸம்பந்தம் ஏற்பட்டும் உபத்ரவம்கிடையாது. மாண்டவ்யர் என்ற மஹரிஷி இதற்கு திருஷ்டாந்தம். மனோநியமநம் ஏற்படாமல் செய்யப்படும் சிறியகாரியமும் கொஞ்சமேனும் பயன்படாது. எல்லாவிதமான ஸமார்த்தயமும் இருந்தபோதிலும் மனோநியமநம் இல்லாமல் இருக்கிறபுருஷன் கிருதார்த்தனாவதில்லை.

“ निर्वेदात् सपदि हृदयं शान्तिमभ्येति पुंसः ” என்று இதையே பெரியோர் வெளியிட்டுள்ளார். ஆகையால் ஸகல ஜனங்களுக்கும் மனோநியமநம் ரொம்ப அவச்யமாகும்.

பிரச்னோபநிஷத் தாத்பர்யம்.

(பிர்மஸ்ரீ ரங்கஸாமி சாஸ்திரியள்) 28—10—31

ப்ரமாணங்களுள் உத்தமமான வேதத்தை த்வாபரயுகத்தில் வேதவ்யாஸர் பிரித்தார். அவருக்கு நான்கு சிஷ்யர். அன்னான்குபேர்களுக்கும் ஒவ்வொரு வேதத்தைக் கொடுத்தார். இவ்

வேதமானது அநேக சாகைகளோடு கூடியது. இதைப்பற்றி முக்திகோபநிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதில் அதர்வ வேதத்தின் உபநிஷத்தாக இந்த ப்ரச்னோபநிஷத்து ஏற்பட்டுள்ளது. இதற்கு இங்ஙனம் பெயர் எவ்விதம் பொருந்தும் என்பதை விசாரிப்போம். இதன் ஆரம்பத்தில் ப்ரச்ன ரூபமாயிருப்பதால் இவ்விதம் கூறுவோமானால் கேநம் முதலிய உபநிஷத்துக்களிலும் இவ்விதம் இருக்கிறது. சிலர் இதற்கு ஷட்ப்ரச்னோபநிஷத்து என்று பெயர் என்று சொல்லுகின்றனர். இதில் ஷட் என்ற பெயரின் ஏகதேசம் போய்விட்டதென்பார். மற்றும் சிலர் प्रश्नप्रतिवचनोपनिषत् என்கின்றனர். ஆராய்ந்துபார்த்தால் இதில் ப்ரச்னம் ப்ரதிவசனம் இவைகளைத்தவிர ச்ருதி தானாக ஆரம்பித்துச்சொல்லாததினால் இதற்குஇந்தபெயர்எற்பட்டிருப்பதென்று பொருத்தமாகும். இது அதர்வவேதத்தின் 31 உபநிஷத்துக்களில் ஒன்றாகும். உபநிஷத்தென்றால் उप ப்ரம்மத்தின் ஸமீபத்தில் அதாவது அபேதமாக नि நிச்சயமாக सादयति அடைவிக்கின்றது ஸம்ஸாரத்தின் நாசத்தைச்செய்து என்று ப்ரம்மஞானத்திற்கு உபநிஷத்தென்று கூறுகின்றனர். மற்றும் சிலர்

उप ब्रह्मसमीपे निषीदन्ति वाचकतया तिष्ठन्ति ।

என்று அர்த்தம் கூறுகின்றனர். இது பொருந்ாது. இதற்கு முக்கியார்த்தம் ப்ரம்மஞானம். அதைப்புகட்டும் க்ரந்தத்தில் இதற்கு கௌணப்ரயோகம். எப்படி நெய்யைப்பார்த்து ஆயுள் என்று கூறுகின்றனரோ அவ்விதமாம். அதன் தாத்பர்யம் என்றால் உட்கருத்து என்றுபொருள். எல்லா சப்தங்களுக்கும் உட்கருத்து வேறு. மேலான அர்த்தம் வேறு. அதில் உட்கருத்துத்தான் ஸரி. विषंभुङ्क्ष्व என்கிறதற்கு முக்யார்த்தம் பாதிக்கப்படுவதால் தாத்பர்யார்த்தம் அதாவது பிறருடைய வீட்டில் போஜனம் செய்யாதே என்பதாகும். இதற்குவேதத்திலும் जर्तिलयवागूर्न्याय: என்று இருக்கின்றது. உலகத்தில் தாத்பர்யம் ப்ரகாணுதிகளால் தெரியப்படுகின்றது. வேதத்திலோ ந்யாயங்களால்தான் அரியப் படவேண்டும்.

पर्यग्निकृतंपात्नीवतमुत्सृजति । सुभ्रुत्वं कुपितेत्यपास्तमशनम् ।

என்ற இடங்களிலும் மீமாம்ஸா அலங்காரம் முதலிய சாஸ்திரநியாயம் அறியாதவன் தத்வார்த்தத்தை அறியமாட்டான்.

கல்பஸூத்திரக்காரர்களுக்குக்கூட ப்ரமம் ஏற்பட்டுவிட்டது இது விஷயத்தில். இவ்விதம் வேதங்களின் தாத்பர்யம் ந்யாயத்தினுல் அறியப்படவேண்டும். அது வ்யாஸஸூத்ரங்களேயாகும்.

तत्तु समन्वयात् । गतिसामान्यात् । प्रकृतिश्च प्रतिज्ञादृष्टान्तानुपरोधात् ।

என்பது முதலியவாகும். இவ்விதமான சூத்ரங்களினுல் அத்வைதத்தில்தான் தாத்பர்யம் அறியப்படுவது. அதுதான் இவ்வுபநிஷத்திற்கும் தாத்பர்யம். अधिकं तु भेदनिर्देशात् என்பதெல்லாம் வாஸ்தவமான பேதத்தைக்கூறுவதாகாது. சிலர் உபநிஷத்தும் சூத்திரமும் வேறு வேறு அர்த்தத்தை அறிவிக்கிறதென்றும் கூறுகின்றனர். அது ஸரியல்ல. वेदान्तवाक्यकुसुमग्रथनार्थत्वात् "தேவர் குறளும் திருநான்மறைமுடியும்—முனிமொழியும் என்று ச்ருதி ஸூத்ரங்களுக்கு ஒரே அர்த்தமென்று அறிவிக்கப்பட்டிருப்பதால் இரண்டுக்கும் ஒரே அர்த்தம். இது முண்டகோபநிஷத்தின் விவரணரூபமானதால் மந்த்ரமும் ப்ராம்மணமும் ஒரே அர்த்தத்தை அறிவிக்கின்றபடியால் அதற்குள்ள உபக்ரமாதிகளால் இதன் தாத்பர்யம் நிச்சயிக்கப்படுகின்றது. முண்டகத்தில் कस्मिन्नु भगवो विज्ञाते என்று உபக்ரமும் ब्रह्मवेद ब्रह्मैव என்ற உபஸம்ஹாரமும் ब्रह्मपश्चात् என்ற அப்யாஸமும் नायमात्मा प्रवचनेन लभ्यः என்று அபூர்வத்தையும் ब्रह्मैव என்ற பலமும் प्लवाह्येते என்று அர்த்தவாதமும் यथोर्णनाभिः என்று திருஷ்டாந்தமும் இந்த உபநிஷத்திற்கு அத்வைதத்தில் தாத்பர்ம் என்பதைத்தெரிவிக்கின்றது. ப்ரச்நோபநிஷத்திலும் परब्रह्मान्वेषमाणाः என்று உபக்ரமத்திலிருந்தும் नातः परमस्तीति என்று உபஸம்ஹாரம் முதலியவைகளாலும் அத்வைதத்தில் தாத்பர்யம் தெரிகின்றது. இதன் மந்த்ரோபநிஷத்தில் परमं साम्यं उपैति, नामरूपे विहाय என்கிற வாக்யங்களால்பேதம் சத்யம் என்றஆக்ஷேபம்நிஜமான பதார்த்தம் ஞானத்தினுல் நாசமாகாதபடியாலும் திருஷ்டாந்தங்களுக்கு सत्यत्वप्रतिपादने தாத்பர்யமில்லாததினுலும் அநிர்வசனீயவாதம் ரொம்பபொருத்தமானதாலும் ஒருவிதமான தோஷமுமில்லை. கௌந்தேயன் ராதேயனுயிருந்து அதிலிருந்து விடுபடுவதுபோல. तस्य कर्तारमपि என்ற இடங்களிலும் कर्तृत्वं अकर्तृत्वं என்று இரண்டும் வாஸ்தவமாகாதபடியாலும் இந்தச்லோகத்தில் வேறு கர்த்தா

கடவுள் இல்லை என்ற அர்த்தம் வ்யாகரண விரோதமானதாலும் தள்ளப்படுகின்றது. இந்த ப்ரச்னோபநிஷத்தில் ஆறு ப்ரச்னங்கள் இருக்கின்றன. அதில் முதல் ப்ரச்னம் ப்ரபஞ்சங்களின் உத்பத்தி மூலமாக வைராக்யத்தையும் இரண்டாவதும் மூன்றுவதும் மனதின் ஐகாக்ரயத்தையும் நான்காவது அவஸ்தாத்ரயவைலக்ஷண்யத்தையும் ஐந்தாவதுப்ரணவோபாஸநத்தையும் ஆறுவது சுத்தாத்மஞானத்தையும் வரிசையாக தெரியப்படுத்துகிறபடியால் இதன் தாத்பர்யம் அத்வைதத்தில்தான் என்பதில் யாதொரு ஆக்ஷேபமுமில்லை.

வர்ணாச்ரமத்தின் கருத்தும் அதன் தற்கால நிலையும்.

(பிர்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரியள்) 28-10-31

வர்ணாச்ரம தர்மாதிகளை ஏற்படுத்திய கடவுளின் கருத்து என்ன? இந்தவ்யவஸ்தை எப்பொழுதும் சுகத்தைக்கொடுக்குமா அல்லது காலபேதத்தினால்வேறுவிதமான பலத்தைக்கொடுக்குமா? என்பதை நன்கு விசாரிக்கவேண்டும். ஆஸ்திகர்களே' நாஸ்திகர்களோ முதல் ஸிருஷ்டியில் வைலக்ஷண்யம் என்பதை ஸ்வீகரிக்க வேண்டும். ஆஸ்திகர்களுக்கோ விசாரிக்க வேண்டியதே இல்லை. வேதத்திலேயே புருஷஸூக்தத்தில் ஜாதிபேதம் முதலிலேயே ப்ரஜாபதிராகாமயத” என்று ஸம்ஹிதையிலும் ஜாதிபேதம் முதலிலேயே உண்டுபண்ணப்பட்டதாகவே தெரிகின்றது. இந்த விதமான ஜாதிபேதம் இல்லாமல்போனால் என்னகெடுதி? இதர தேசங்கள் ஸுகமாக இருக்கவில்லையா? எனில் சரிதான் ஆனால் பிறந்தவன் பிறகு போகும்வழியையும், ஜென்மாந்தரத்தையும் தர்மாதர்மங்களையும்பற்றிதான் இந்த வ்யவஸ்தை செய்யவேண்டி வருகிறது. இதில் யாருக்கும் அக்ஞானம் அதிகம். இதில்தான் சாஸ்திரம் ஒரு பெரிய தீபமாகும். அந்த சாஸ்திரத்தினால் தர்மாதர்மாதிகள் நன்கு போதிக்கப்படுகின்றன, அந்த தர்மங்கள் அனேகமும் அநேகவிதமாயுமானதால் அதை ஒருவரால் செய்ய முடியாது. எப்படி தனத்தைவிபாகம்செய்யாமல்போனால் அதைபரிபாலனம் செய்யமுடியாதோ அவ்விதந்தான் தர்மத்தின்கதியும் இந்த தர்மம் என்ற தனமானது வெகுகாலம் இருந்து ஜன்மாந்திரத்திலும் பயனைக்கொடுக்கக்கூடியது. ஆகையால் அதை ஸம்

பாதிக்கவழிதேடவேண்டும். மனிதனுக்குகேவலம்போஜநாதிகள் மாத்திரம்புருஷார்த்தமல்ல.ஆனால்சரீரபோஷணமும்புத்திபோஷண முமாகும். இவ்விரண்டு கார்யமுமிதரர்களுடைய ஒத்தாசையில்லா மல்செய்யக்கூடியதல்ல. அதற்கு இதரர்கள்உபகாரம்வேண்டுமானால் உபகாரம் செய்யக்கூடியவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளுபவர் ஆகிய இரண்டுபேரும் ஒரேமாதிரியாகயிருக்கமுடியாது. உல கத்தில் ஜனங்களின் வ்யத்யாஸமே வேண்டுவதில்லையென்றுகூற முடியாது. ஸ்திரீபுருஷர்கள் வேறுபட்டவர்களாகவே இருக்க எல்லோரும் ப்ரார்த்திக்கிறார்கள். இவ்விதமாக அநேகவிதமான தர்மங்களை அநேகம்பேர் அனுஷ்டானம்செய்ய அதைக் காப்பாற் றுகிறவர்கள் தேவை. அதற்கு முக்கியமான ஸாதனம் தபஸ்ஸு முதலியவைகளே. அவைகளால்தான் மழை முதலிய கார்யங்கள் ஏற்படுகின்றன. இவ்விதமான தபஸ்ஸுகள் செய்ய ப்ராம்மணன் ச்ருஷ்டிக்கப்பட்டான். ஆகையால் இவ னுக்கு விசேஷமாக புத்திபோஷணம் ஏற்படவேண்டும். இவ்வி தமான ப்ராம்மணனைப் பாதுகாக்க க்ஷத்திரியன் ஏற்பட்டான். இவன் கைபலத்தினால் சத்ருக்களை நிக்ரஹம்செய்து பாது காக்கிறான். இவனுக்குஆஹாரநிமித்தம்வைச்யன்ஸ்ருஷ்டிக்கப்பட் டான். இவர்களுக்கு சுச்ரூஷை செய்யும்பொருட்டுசூத்ரன் ஸ்ருஷ் டிக்கப்பட்டான்.இதில்யாரிடம் எந்த அம்சமதிகமாகயிருக்கிறதோ அதனால் இதரனுக்கு அவன்உபகாரம் செய்யவேண்டும். இதையே ப்ருஹதாரண்யகம் தெரிவிக்கிறது ब्रह्मवाइदमग्रआसीत् என்று கூறி தான் உலகத்தை ரக்ஷிக்கிறதற்கு போதுமாகாதபடியால் ப்ராம்ம ணன் முதலிய ஜாதிகளை உற்பத்திசெய்ததாகக் கூறுகிறது. தேவ லோகத்திலும் இவ்விதம் ஜாதிபேதம் உண்டு. ப்ருஹஸ்பதி ப்ரும்மணன். இந்திரன் க்ஷத்திரியன். வஸுக்கள் ருத்தி ரர்கள் ஆதித்யர்கள்முதலியவர்கள் வைச்யர்கள். பூஷா என்பவன் சூத்திரன். இவன் பூமிக்கு அதிஷ்டாத்திரியான தேவதா. கீதையிலும் பகவான் நான்குவர்ணங்களை உண்டுபண்ணும் பொருட்டு அவரவர்களுடைய குணங்களைக்கொண்டு ஜாதியை சிருஷ்டி செய்தானென்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் ஈச் வரன் தானாக ஜாதிபேதம்செய்கின்றானென்றுதோஷம்கூடாது. ப்ராம்மணாதிகளுக்கு சமாதி குணங்கள் அஸாதாரணங்கள். विद्यतेगोषुसंपन्नं विद्यतेब्राह्मणेदमः என்று ராமாயணவாக்யத்தினாலும்

இது ஏற்படுகின்றது. இந்தவிதமாகப்ராம்மணனுக்கு சமாதிகள் க்ஷத்திரியாளுக்கு சரீரபலம் முதலியது அவச்யம் என்றும் சொன்னவுடன் க்ஷத்திரியாதிகளுக்கு பலம் ஏற்பட்டு அவனால் உபத்ரவம் ஏற்பட்டால் என்னசெய்வதுஎன்றால் क्षत्रस्य क्षत्र என்று ஸத்யம் என்ற தர்மத்தினுடைய பலத்தினால் அவனையும் வெல்லலாமென்று சொல்லப்பட்டது. அப்பேர்பட்ட ப்ராம்மண னுக்கு தாரித்ர்யம் என்பது மிகவும்நல்லது. ஏனெனில் அப்பொ ழுதுதான் அவன் அஹங்காரத்தை விட்டுவிடுகின்றான். இவ்விதம் ப்ராம்மணன் சமாதிகளைகுணமாயும்ஸத்துவத்தினால் லோகஜயமும் மனோபலத்தினால் இதார்களுக்கு உபதேசமும் செய்யவேண்டும் என்றும் நியமநம் கூறப்பட்டது. பிறகு க்ஷத்திரியருடைய தர்மங்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது பயத்திலிருந்து ஜனங் களைக் காப்பாற்றுவது நியாயத்தினால் ராஜ்யபரிபாலனம். அதில் ப்ராம்மணனின் ஸஹாயம் நியாயம்முதலியவைகளை தீர்மானம் செய்வதில் ப்ராம்மணமூலமாகச்செய்வது என்பதாகும். மேலும் யக்ஞம் முதலியவைகள் செய்ய ப்ராம்மணனுக்கு ஒத்தாசை செய்யவேண்டும். யக்ஞம்என்ற கார்யம் யார் செய்கிறானோ அவனுக்குமாத்ரமல்ல. ஆனால் ஸகலலோகங்களுக்கும் க்ஷேமத் திற்காகவே.

सहयज्ञाः प्रजास्सृष्ट्वापुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वं एषवोऽस्त्विष्टकामधुक् ॥

என்று கீதையிலும் ஸகலஜனங்களின் க்ஷேமத்திற்காக யக்ஞமும்

देवान् भावयतानेन ते देवाभावयन्तु वः ।

என்று தேவதைகளின் ப்ரீதியும் இதன் மூலமாகத்தான் என்றும் விளக்கப்பட்டது. அந்த யக்ஞத்தில் தேவர்களுக்குப்ரீதி அக்னி மூலமாகத்தான் ஏற்படுகின்றது. ஏனெனில் தேவர்களுள் அக்னியென்பவர் ஒருவராவார். ப்ராம்மணனுக்குபாஸிக்கக்கூடிய தேவதை அக்னிதான் आग्नेयोवैब्राह्मणोदेवतया என்று ச்ருதிகூறி இருக்கிறது. ப்ராம்மணனுக்கும் அக்னிக்கும் இடைவிடாத ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அக்னியின் உபாஸனையால் ப்ராம்மணன் ஸகலவிதமான அகார்யங்களினின்றும் விடுவிக்கப் படுகிறான்.

नहिब्राह्मणस्योदरं किञ्चनदिह्नास्ति ।

என்று ச்ருதி ப்ராம்மணன் அக்னியுபாஸநத்தினால் எல்லாவற்றையும் ஜரிக்கச்செய்கிறான் என்பதைத் தெரிவிக்கிறது. மேலும் அந்த அக்னியே ப்ராம்மணன் என்று கூறப்படுகிறது

एषवा अग्निर्वैश्वानरो यद्ब्राह्मणः ।

என்று. ஆகையால் ப்ராம்மண திருப்தியிலும் அக்னியின் திருப்தியிலும் ஸகலதேவர்களும் திருப்தியடைகின்றனராகையால் அக்னியுபாஸனத்தைக் கைக்கொள்ளவேண்டும். அந்தஅக்னியின் ஸம்பந்தம் விவாஹத்தினால் ஏற்படுகின்றது. அந்த விவாஹத்திற்கு ஸ்திரீசுத்தி அவச்யம். ஸ்திரீகள் கெட்டுவிட்டால் அதனால் அக்னி கெட்டுவிடுகிறது. வர்ணஸாங்கர்யம் ஏற்படுகிறது. அக்னியில்லாமல் 12. நாளைக்குமேல் ஒரு ப்ராம்மணன் இருந்தால் அவன் தன் ப்ராம்மண்யத்தை இழுந்தவனாகிறான். இவ்வளவு சொன்னதினால் என்ன ஏற்படுகின்றது? வர்ணாச்ரமாதி வ்யவஸ்தையினால் ஏற்பட்ட தோஷமல்ல நாம் ச்ரமப்படுகிறது. ஆனால் அதைவிட்டதினால்தான். வேதத்திலோ மற்ற எந்த இடத்திலோ ஓரிடத்திலும் ப்ராம்மணனை உயர்த்திப்பேசவில்லை. அவனுக்கு நியமங்கள்தான் அதிகமாகக் கூறப்பட்டுள்ளன. ரிஷிகள் தங்களைச் சேர்ந்தவர்களுக்காக ஒருகாரியம் பக்ஷபாதத்தினால் செய்திருப்பார்களேயானால் அரசாளுவதையும் சம்பாதிப்பதையும் ப்ராம்மணன் தர்மமாக ஏன்சொல்லியிருக்கக்கூடாது. ஆகையால் நாம் அவ்விதம் நினைப்பது பிசகு. ப்ராம்மணன் சமாதிகுணங்களோடு கூடினவனாகயிருந்தாலும் அது அவனுக்கு உத்கர்ஷாவஹம் அல்ல. இதரமதஸ்தர்களுக்கு அணு துளியிருந்தால்கூட கொண்டாடப் படுகிறன்று, மேலும் இதர அவமானத்தினால் வருத்தப்படுவது ந்யாயமல்ல. அந்த ப்ராம்மணர்களின் தர்மம் கூட ஸ்திரீகளின் நற்செய்கைகளில்தான் நிலைநிற்கின்றது, நாம் சிலதவறுகள் செய்தால்கூட நமதுஸ்திரீகளை ஸரிவரப் பாதுகார்த்தோமானால் அவர்களிடத்தில் ப்ராம்மவிவாஹத்தில் உண்டாகும் குழந்தையினால் 21. வம்சம் கரையேறுவதாக ச்ருதி ஸ்மிருதிகள் தெரிவிக்கின்றன. ஆகையால் நமது வர்ணாச்ரம தர்மத்தை நாம் சரியானபடி பரிபாலநம் செய்தால் வருங்காலத்திலும் நாம் ச்ரமத்தை அடையாமலிருக்கலாம். ஆகையால் ஸமஸ்தமான ஜனங்களுக்கும் வர்ணாச்ரம தர்மங்களில் விசேஷமாகப் பற்றுதல் ஏற்படும்படி நாம் கடவுளை ப்ரார்த்திப்போமாக.

ஆனந்த தத்வ நிர்ணயம்.

(மஹாமஹோபாத்யாய அநந்தகிருஷ்ண சாஸ்திரிகள்.)

ஆனந்தம் என்பது புழுமுதல் பிரும்மாவரையில் பலவிதமா கக்கண்டாலும் ஆனந்தத்தின் ஸ்வருபத்தில் பேதமென்பதே கிடையாது. ஆனந்தங்களுக்கு அதனதன் கருவிகளினால்தான் பேதம். பரமநாஸ்திகர்களான சார்வாகர்கள்முதல் முக்தர்கள் வரை அவரவர்களுக்கும் ஆனந்தமுண்டு. அந்த ஆனந்தங்களுக்கு முக்கியமான கருவி பொருள். (தனம்) அந்தப் பொருளை அடைவதற்காக பிருஹஸ்பதி சுக்கிராசார்யாள், காமந்தகர் முதலியவர்களால் அர்த்த சாஸ்திரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் காமந்தகருடைய அர்த்தசாஸ்திரமே மேலானது. அவர் தனது நீதியால் நந்தனுடைய ராஜ்யத்தை கைப்பற்றி சந்திரகுப்தனிடம் ஒப்புவித்தார். அந்த அர்த்த சாஸ்திரங்களில் முக்கியமாகச் சொல்லும் கருவிகள் மூன்று. த்ரயீ, வியாபாரம், தண்டநீதி, என. இவைகளில் வியாபாரம் தண்டநீதி இவ்விரண்டுகளைக் கொண்டு அர்த்தத்தை அடைந்ததற்கு உதாஹரணம் ஆங்கிலேயர்களே. அவ்வாங்கிலேயர்கள் முதன்முதல் வியாபாரத்தை உத்தேசித்து இந்தியாவை அடைந்து நாளடைவில் நம் ராஜ்யத்தைக்கைப்பற்றி தண்டநீதியால் நம்மையடக்கி ஆண்டுவருகின்றார்கள். வியாபாரம் தண்டநீதியென்னும் இவ்விரண்டினாலேயே ராஜ்யம் முதலியதுகளை பெறுவதென்றால் த்ரயீமுதலிய மூன்றையும்சேர்த்து அனுஷ்டித்தால் அர்த்தம் கிடைப்பதில் சம்சயமில்லை. அவரவர்களுக்குக் கிடைத்தபொருளை மற்றொருவர் வியாபிக்காமலிருக்கவேண்டுமென்கிற எண்ணம் கீழான நாய்முதல் மேலான தேவர்கள்வரையிலிருக்கின்றது. அப்படியிருக்க மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் விசேஷம் யாதென்றால் கீழ்ச்சொன்ன எண்ணத்தை விசேஷமாக சொல்லமுடியாது. பேசுவதும் விசேஷமல்ல. கேகயராஜா முதலியவர்களுடைய உபாக்யானத்தினால் ஸகல ஜந்துக்களுக்கும் பேசும் சக்தி உண்டென்பது தெரியவருகிறது. யுக்தியும் விசேஷமென்று சொல்லமுடியாது. அதுவும் ஸகல ஜந்துக்களுக்கும் உண்டென்று நன்றாய்த் தெரிகின்றது, ஆகையினால்

धर्मो विशेषः पशुभ्योनराणाम् ।

என்றபடி தர்மந்தான் விசேஷம். ஆகையினால் த்ரயீ முதலிய மூன்றுகளுக்குள் ஒன்றுக்கொன்று விரோதம் வருங்கால் தர்மத்

திற்கு விரோதமில்லாமல் அர்த்த சாஸ்திரத்தை கைக்கொள்ள வேண்டும். மேலும் அவரவர்கள்செய்த தர்மாதர்மங்கள்தான் மனிதர்களைப் பின்பற்றுமேயன்றி பொருள்கள் பின்பற்றாது ஆகையினாலும் தர்மத்தைவிடுவது உசிதமன்று. தற்காலத்தில் தர்மத்தைக் கைவிட்டாலும் அர்த்தமே முக்கியமென்று எண் ணத்தால் ஜாதிபேதங்களையும் தீண்டாமைகளையும் ஒழித்தாவது ராஜ்யத்தையடைய முயற்சிசெய்கின்றார்கள். விரோதம் வருங் கால் உதாசீனமாகவாவது அவசியம் இருத்தல்வேண்டும், இந்தக் கொள்கையினால்தான் விக்டோரியா ராணியார் உதாசீனமாக இருந்திருக்கின்றார்கள். நாமிவ்விதம் மதபேதங்களைப்பற்றியும் ஜாதிபேதங்களைப்பற்றியும் கலகமிடுவது ராஜ்யம் கிடைக்காமலி ருப்பதற்கே காரணமாகும். ராஜ்யத்தை அடையவிரும்பும் நாம் உள்கலகம்செய்வது பிழைப்பதற்காக விஷம் சாப்பிடுவதற்கொப் பாகுமேயொழிய வேறல்ல. மேலும் தர்மத்தை அவலம்பித்து மற்ற தேவர்களைக்கூட உதாஸீனம்செய்வதுண்டு என்பது பல கதைகளால் விளங்குகின்றன. ஆகையினால் விஷயானந்தங்களில் பற்றுதலன்னியில் தர்மத்தை அனுஷ்டிப்போர்களுக்கு ஹிரண்ய கர்ப்பருடைய ஆனந்தம்வரை ஏற்படும் என்பது தைத்திரீயோப நிஷத்தில் श्रोत्रियस्यचाकामहतस्य என்ற சுருதியினால் தெரியவரு கின்றது. ஆகையினால் எவ்வளவுஜென்மம் எடுத்தாலும் பின் தொடரும் தர்மமாகிறபணத்தை எல்லா ஆனந்தத்திற்கும் காரண மாயிருக்கின்றபடியால் விடவேகூடாது.

மேலும் உலகில் முன்னோரால் சம்பாதிக்கப்பட்ட தனத்தை சிலவுமட்டும் செய்பவர் சிலர். தானேசம்பாதித்துத்தானே சிலவு செய்பவர் சிலர். முன்பணத்தோடுகூட தானும் சம்பாதிப்பவர் சிலர். அதில் சம்பாதிப்பவர் புத்தி திறமையுள்ளவர் என்பதில் சந்தேஹமில்லை. அதுபோல மிகுந்த புண்யத்தினால்தான் இந்த நல்லஜன்மம் கிடைக்கின்றது. அதில் நாம் புண்யத்தை மேன் மேலும் சம்பாதித்தால்தான் என்றும் ஆனந்தத்தை அனுபவிக் கலாம், மனிதப்பிறப்பிற்கு விசேஷமும் உண்டு. இல்லாவிடில் மிருகங்களுக்கொப்பாய்விடுவோம். தர்மத்தை அனுஷ்டிப்பதில் மிகக் கஷ்டம் இருக்கலாம்; ஆனாலும் தர்மானுஷ்டானத்தால் கேவலம் இந்த ராஜ்யத்துடனில்லாமல் பூராஜ்யம். தேவராஜ்யம் முதலிய ஸகலங்களையும் அடையலாமாதலால் தர்மத்தை ஒரு

நாளும் கைவிடக்கூடாது. நமது ஆனந்தத்தைவிட ஹிரண்ய கர்ப்பரினுனந்தம் மிக்கபெரியது. அந்த ஆனந்தம் எப்படி இருக்குமென்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். அனுபவிக்காதவர்களுக்குச் சொல்ல முடியாது. இதையே "பாமதீ" காரரும்,

"नखलुइक्षुक्षीरगुडादीनां मधुररसभेदाः शक्यास्सरस्वत्याप्याख्यातुम् ॥

கரும்பு முதலியவைகளுடைய தித்திப்பை ஸாஸ்வதியால்கூட சொல்ல இயலாது" என்று சொல்லுகிறுர். ஆகையினுல் மூன்று வேதங்களால் நிரூபிக்கப்படும் தர்மங்களுடன் கூடவே அர்த்த சாஸ்திரத்தை நாம் அனுஷ்டித்து ஸகல ஆனந்தங்களேயும் அடைவோமாக.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

கீழ்க்கூறியவாறு பிரச்சன்ன சார்வாகமதமாகிய மத்வமதம் அந்தரங்கத்தில் தனக்கு ஸஜாதீயமான பௌத்தமதத்தில் விசேஷ அபிமானம் கொண்டது என்பது இரண்டாவது ரஹஸ்யம். அது வருமாறு—பௌத்தமதத்தில் "அஹிம்ஸா பரமோதர்ம:" "ஒரு பிராணியையும் ஹிம்ஸிக்காமலிருப்பதே பெரியதர்மம்" என்று அஹிம்ஸையானது முக்ய தர்மமாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. வேதத்திலும் அஹிம்ஸை ஆவச்யகமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமான அஹிம்ஸை முதலிய வேத விருத்தமாயில்லாத விஷயங்களில் பௌத்த சாஸ்திரங்கள் பிரமாணங்களென ஒப்புக்கொள்வதில் பாதகமில்லையெனப் பூர்வ பக்ஷத்தைப் பூர்வமீமாம்ஸையின் முதலாவது அத்யாயம் மூன்ருவதுபாதம் शिष्टाकोपेऽविरुद्धमितिचेत् "சுருதிஸ்மிருதிகளில் உபதேசிக்கப்பட்ட விஷயங்களுக்கு விரோதமில்லாத அஹிம்ஸை முதலிய விஷயத்தில் பௌத்தாகமம் பிரமாணமாவது விரோதமில்லையென்ருல்" என்னும் ஸூத்திரத்தில் செய்துகொண்டு, न शास्त्रपरिमाणत्वात् அது ஸரியன்று தர்மவிஷயத்தில் இவ்வளவு சாஸ்திரங்கள்தான் பிரமாணங்களாகுமென வியவஸ்தை யிருப்ப

தால்'' என்னும் ஸூத்திரத்தால் நான்குவேதங்களும் சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என அவற்றின் ஆறு அங்கங்களும் புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம், என அவற்றின் நான்கு உபாங்கங்களும் ஆகப் பதினான்கு வித்யாஸ்தானங்களே தர்மவிஷயத்தில் பிரமாணங்களாகும், மற்றவைகள் பிரமாணங்களாகமாட்டாது. நியமப்படி வேதங்களை அத்யயனம் செய்து அந்தவேதங்களின் மூலமாகவும் அவற்றை அனுஸரித்த ஸ்மிருதி முதலியவைகளின் மூலமாகவும் அறிந்து தர்மங்களை அனுஷ்டானம் செய்தால்தான் சிரேயஸ் உண்டு. பௌத்தாகமம் முதலியவைகளைக்கொண்டு தர்மங்களை அறிந்து அனுஷ்டானம்செய்வதில் பிரயோஜனமில்லை. அஹிம்ஸை ஸ்வரூபத்தினால் தர்மமானாலும் அது அவைதிக பௌத்தாகம மூலமாக வெளிப்பட்டால் श्वदृतिधृतमिवपय: நாய்த்துருத்தியில் வைக்கப்பட்ட பாலைப்போல் பௌத்தாகமஸம்பந்தத்தால் அதர்மமாகின்றது என்று ஸித்தாந்தம் பட்டவார்த்திகத்தில் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் பௌத்தர்கள் சொல்லும் அஹிம்ஸை வேதவிருத்தமாயுள்ளது எனெனில்

अहिंसन् सर्वभूतान्यन्यत्रतीर्थेभ्य: ।

"பிராணிகளைச்சாஸ்திர விஹிதமான யாகாதிகளைத்தவிர மற்ற விடங்களில் ஹிம்ஸிக்காமலிருந்துகொண்டு'' என்றும் तस्माद्यज्ञेवधोऽवध: ஆகையால் யாகத்தில் பசுவவதமானது வதமன்று'' என்றும் अशुद्धमितिचेन्नशब्दात् "யாகம் பசுஹிம்ஸையுடன் கூடியிருப்பதால் தோஷமுள்ளது என்றால் அது தவறு. சாஸ்திரத்திலேயே யாகத்தில் பசுஹிம்ஸையை விதித்திருப்பதால்'' என்றும் வசனங்களால் வேதத்தில் ஹிம்ஸிக்கக்கூடாது என்று நிஷேதித்திருப்பது யாகஸம்பந்தமான பசுஹிம்ஸையைத்தவிர மற்றஹிம்ஸைகளைத்தான். பௌத்தர்களோ எல்லாஹிம்ஸைகளையும் தடுத்திருக்கிறார்கள். ஆகையால் பௌத்தர்கள்கூறும் அஹிம்ஸை வேதவிருத்தமானது. இந்த விஷயம்

शाक्यादिग्रन्थेष्वहिंसावचनं हिंसासामान्यनिषेधपरम् ।
नतु विहिताग्नीषोमीयादि पशुहिंसाव्यतिरिक्तविषयम् ॥
ततश्च वेदविरोधादेव तत्राप्यप्रामाण्यम् ।

“பௌத்தாதி கிரந்தங்களில் கூறிய அஹிம்ஸா வசனமானது எல்லா ஹிம்ஸையையும் நிஷேதிக்கின்றது. வேதத்தைப்போல் அக்னீஷோமீயம் முதலிய பசுஹிம்சையைத் தவிர மற்ற ஹிம்சையை நிஷேதிக்கிறதில்லை. ஆகையால் வேதவிரோதமிருப்பதாலேயே அந்த அஹிம்ஸைமுதலிய விஷயத்திலும் பௌத்த ஆகமம் அப்பிரமாணம்” என்று ஸோமநாதீயத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

ஆகையால் அஹிம்ஸாவிஷயத்தில் வைதிகர்களுக்கும்பௌத்தர்களுக்கும் அபிப்பிராய பேதமுண்டு. வைதிகர்கள்வேதத்தையேமுக்கியப்பிரமாணமாக ஒப்புகொண்டிருப்பதால் யாகம்முதலியவிடங்களில்பசுஹிம்ஸையை! இதுவேதவிஹிதம் ஆகலால்தோஷம்இல்லை. என நம்பிச்செய்வார்கள். பௌத்தர்களோ வேதத்தை அப்பிரமாணமாக ஒப்புக்கொண்டிருப்பதால்யாகிய பசுஹிம்ஸையைத் தர்மமென ஒப்புக்கொண்டு அநுஷ்டிக்கமாட்டார்கள். அதை தூஷிக்கவும் செய்வார்கள். ஓர் அரசன் யாகம்செய்யும்பொழுது புத்தர் அவ்விடம் போய் பசு ஹிம்ஸையை அதர்மமெனத் தூஷித்து அந்த யாகத்தைத் தடுத்துவிட்டதாகப் புத்தசரித்திரமூலமாகவும் தெரியவருகிறது. இவ்விதம் பௌத்தர்களைப் போலவே மாத்வர்களும் யாகத்தில் பசுஹிம்ஸை செய்கிறதில்லை. மத்வமதம் வேதத்தை வெளிக்கு ஒப்புக்கொண்ட பிரச்சன்ன சார்வாக மதமானதால் மாத்வர்கள் ஒருவாறு வேதவிஹிதமான யாகத்தைச்செய்யும்படி நேரிட்டாலும் அதில் பிரத்யக்ஷமான பசுவை ஹிம்ஸிப்பதில்லை. பின்னையோவெனில் அந்த ஸ்தானத்தில் பிஷ்டத்தினால் (மாவினால்) பசுவைப்போல் பண்ணி அதைக் கொண்டுதான் யாகம்செய்கிறார்கள்.

(தொடரும்.)

போலகம் ஸ்ரீ. ஸ்ரீராம சாஸ்திரி.

ஸநாதனதர்மத்திற்கு அபாயம்.

தார்மிகஹிந்துக்களின் கடமை.

சுயராஜ்யமார்க்கம்:- இதுவரையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடன் ராஜீய போராட்டம் இந்தியா முழுவதிலும் பலமாக நடத்திவரப்பட்டமையால், ஸமுதாய சீர்திருத்தக் கிளர்ச்சி

அவ்வளவாக வலுக்கவில்லை ஷெ ராஜீயகிளர்ச்சி இனி [பெரும்
பான்மையாகக் குறையலாம். ஏனெனில் ஒவ்வொரு மாகாணத்
திலும் மாகாண சுய ஆட்சியையும், அகில இந்தியாவுக்கு,
அதாவது மாகாணங்களுக்கும், சுதேச ஸமஸ்தானங்களுக்கும்
சேர்த்து, தக்க பாதுகாப்புகளுடன், ஸமஷ்டிமுறையில் சுய
ஆட்சியையும், கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிப்பதற்கு தாங்கள் சித்த
மாகவிருப்பதாக இங்கிலாந்தின் பிரதான மந்திரி உறுதிமொழி
யளித்திருக்கிறார். இத்தகைய சுயஆட்சி ஸ்தாபனங்களினால்,
பசியினால் வருந்தும் ஏழைஜனங்களுக்கு என்ன அனுகூலங்கள்
ஏற்படும் என்பது இனிமேல்தான தெரியவேண்டும். ஆனால்,
இனிமேல் ஒவ்வொரு சட்டசபையிலும், மதாசார அனுஷ்
டானங்களைத் தொலைத்துவிடவேண்டும் என்று எண்ணும் சுயமரி
யாதை கக்ஷியாரோ, காந்தி சிஷ்யர்களோ, வேறு சமுதாய சீர்
திருத்தக்காரரோ இவர்கள்தான் பெரும் தொகையினராக ஏற்
படக்கூடும். இவர்கள் ஸநாதனதர்மத்தை அழிக்கவோ, கோயில்
களுக்குள் பஞ்சமர்களின் பிரவேசத்தை பலாத்காரப்படுத்தவோ
சாரதாசட்டத்தைக்காட்டிலும் இன்னும் கொடிய சட்டங்களை
இயற்றவோ இம்மாதிரியான அநீதங்கள் பல செய்யுங்கால், தார்
மிக இந்துக்களாகியநாம் என்னசெய்வது?

"கோயில் ஸத்யாக்ரஹம்"—இப்பொழுது குருவாயூரில்
ஸ்ரீ கிருஷ்ணபிரான் ஸந்நிதியிலும், நாஸிக்க்ஷேத்திரத்தில் ஸ்ரீராம
பிரான் ஸந்நிதியிலும் காங்கிரஸ்காரர்கள் கோயில் ஸத்தியாக்கிர
கம்,, என்பதைத் தொடங்கியிருக்கிறார்கள் எதற்காக? தீண்டா
தார் உள்பட எல்லா ஹிந்துக்களினிடையே பூர்ணஸமத்துவத்தை
ஸ்தாபிப்பதற்காகவாம். கோஹத்தி, கள்குடித்தல் முதலிய
பாபச்செயல்களை குலத்தொழிலாக கைக்கொண்டிருக்கும் பஞ்ச
மரைக்கூட தீண்டாதார் எனக்கருதக்கூடாதாம். அப்படி அவர்
களை ஒதுக்கிவைத்ததினால் ஜாதி ஹிந்துக்கள் மகத்தான அதர்மத்
தைச்செய்து விட்டார்களாம். அவ்வதர்மத்தைப் பரிஹரிக்க
இப்பொழுதாவது பஞ்சமருக்கு ஜாதி ஹிந்துக்கள் தங்களுடன்
ஸமத்துவத்தையளித்து, அவர்களை எல்லாக்கோயில்களுள்ளும்
சேர்த்துக்கொள்ளவேண்டுமாம். இதற்காகவே காந்தி சிஷ்யர்
கள் ஷெ கோயில் சத்யாக்ரஹங்களைத் தொடங்கியிருக்கிறார்
களாம். இன்னும் ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் இத்தகைய

ஸத்யாக்ரஹம் தொடங்கப்படுமாம். தவிரவும் இங்கிலீஷ்படித்த ஹிந்துக்களில் பலர் 'ஐக்யம்' 'ஸமத்துவம்' என்ற பதங்களைக் கேட்டும், மேனாட்டு நாகரீகபுத்தியில் மயங்கியும், ஸநாதன தர்மத்தின் மஹிமையை அறியாதவர்களாய் ஷை ஸமத்துவக் கிளர்ச்சியை ஆதரிக்கிறார்கள். பிரபல தேசியபத்திரிகைகள் எல்லாம் அவர்களுடைய கையிலிருக்கின்றன. தார்மிக ஹிந்துக்களின் அபிப்பிராயங்கள், மதராஸ்ஹிந்துபத்திரிகைபோன்ற பத்திரிகைகளில்பிரசுரமாவதுகூட கஷ்டமாகவிருக்கிறது. இந்த ஸந்தர்ப்பத்தில்நமதுபழைய தர்மங்களை நாம் பாதுகாப்பதெப்படி?

நமது கடமை:—ஸநாதனதர்மத்தில் பூர்ணபக்தியுள்ளவன், ராஜீய கிளர்ச்சியிலும் கொஞ்சம் அனுபவமுள்ளவன் என்றமுறையில் அடியேனுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கத்துணிகிறேன். (1) பொதுவில் ஸநாதனதர்ம ப்ரசாரத்தை நாடெங்கும் பரப்பவேண்டும்; முக்கியமாக கலாசாலைப் பிள்ளைகளுக்கு தார்மிக புத்தியை ஊட்டவேண்டும்—இதற்காக ஒவ்வொரு ஸ்ரீமடாதிபதியும் தக்க பிரசாரகர்கள் பலரை நியமிக்கவேண்டும். (2) உடனே நமது மாகாணத்தில் ஸநாதனதர்மத்தை ஆதரிக்கும் ஒரு ஆங்கில தினசரி பத்திரிகையையும், இரண்டொரு தேசபாஷை பத்திரிகைகளையும் எற்படுத்தவேண்டும். இதற்கு ஸ்ரீமடாதிபதிகளும் தார்மிக ஹிந்துக்களும் வேண்டிய தனநிதியை ஏற்படுத்தவேண்டும். (3) சாரதாசட்டம் கூடாதென்று நாம்செய்த பலமான கிளர்ச்சியின் பயனாக ஷை சட்டம் தீவிர அமுலுக்கு இன்னம் கொண்டுவரப்படவில்லை. அதைக்காட்டிலும் பலமாக இப்பொழுது இந்தகோயில் ஸத்யாக்ரஹங்களுக்கு எதிர்க் கிளர்ச்சியை செய்யவேண்டும். (4) முக்கியமாக மதாசார பாதுகாப்பை ராஜாங்கச்சட்டமூலமாக ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதாவது லௌகிக சுயராஜ்ய விஷயமாக சீக்கிரத்தில் ஏற்படப்போகிற பார்லிமெண்டு சாஸனத்தில் மதாசாரபாதுகாப்பு ஷரத்தொன்று ப்ரத்யேகமாகவேண்டும். அதாவது இந்தியாவில் எந்த ஸமூஹத்தாருடையவும், மதாசார விஷயங்களில் எந்தராஜாங்க உத்தியோகஸ்தர்களும், சட்டசபைகளும் பிரவேசிக்கக்கூடாது; எந்த விஷயங்கள் மதாசாரங்களைப் பாதிக்கக்கூடியவை என்பதை அந்தந்த மதாசாரியர்கள் அல்லது மதசபைகள் மூலமாக அறியவேண்டும். இத்தகைய மதாசாரபாதுகாப்பை முன்னிட்டு

தான் சுயராஜ்ய சீர்திருத்தமும்வேண்டும் என்று நாம் உடனே பலமாக பலவிடங்களிலும் கிளர்ச்சியைத் தொடங்கவேண்டும்; ஆங்காங்கு ஸபைகள்கூடி தீர்மானித்து, பத்திரிகைகளுக்கும் கவர்மெண்டாருக்கும் அனுப்பவேண்டும். (5) இந்த டிஸம்பர் மாதக்கடைசியில் 27, 28, 29உகளில் கல்கத்தாவில் கூடப்போகிற அகில பாரதவர்ஷீய வர்ணாசிரமசுயராஜ்யசங்கமஹாநாட்டுக்கு ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் தக்க பிரதிநிதிகளும், ஒவ்வொரு மடத்திலிருந்தும் பண்டிதர்களும்போய் ஷை மதாசாரபாதுகாப்பு சட்டத்திற்காக தகுந்த ஒரு அகில இந்திய கமிட்டியை ஏற்படுத்தி அதன் பெருமுயற்சியால் காரியசித்தியைத்தேடவேண்டும். இந்த தர்மரக்ஷண விஷயத்தில் ஒவ்வொரு ஸ்ரீமடமும், ஸநாதனஸபையும் அதிசிரத்தையுடன் உழைக்கவேண்டும். இப்படி நம்மால் ஸாத்தியப்பட்டவரையில் நாம்முயன்று அதற்குமேல் கருணாஜலதியான ஸ்ரீ வாஸுதேவனுடைய அனுக்ரஹப் பலத்தையே யாசிக்கவேண்டுமென்று மிக்க வணக்கத்துடன் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்.

46. லிங்கசெட்டித்தெரு } இப்படி தாஸாநுதாஸன்,
சென்னை. 4—12—31. } (ஒ) M. K. ஆசார்யன் எனப்படும்
ஸ்ரீகிருஷ்ணதாஸன்!

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

குரு.

1. ஒருஸமயம் ப்ருஹ்மதேவர் வருணன்செய்யும் யாகத்திற்குச்சென்றார். அந்த யாக அக்னியிலிருந்து ஓர் குழந்தையைப் படைத்தார். அதன் பெயர் ப்ருகு. உலகில் இவர் வம்சம் ப்ரசித்தமானது. இவர் மனைவி புலோமா என்பவள். இவள் குழந்தையாகயிருக்கும்பொழுது அழுதாள். இவளைப்பயமுறுத்த இவள் தகப்பனார் அழாதே! ராக்ஷஸனிடம் கொடுத்துவிடுவேன் உன்னை என்றார். அதைப் புலோமாஎன்ற ராக்ஷஸன் கேட்டுக்கொண்டிருந்தான். தனக்குத்தான் அவன் என்று எண்ணிக்கொண்டான். ஆதலால் எப்போதும் நல்ல வார்த்தைகளையே பேசவேண்டும்.

2. ப்ருகு இல்லாதஸமயத்தில் ராக்ஷஸன் அவளைக்கொண்டு போக நினைத்தான். அக்னிஹோத்ர சாலையில்போய் அக்னியை இவள் எனக்குக்கொடுக்கப்பட்டாள் இல்லையா? என்றான். அக்னி பயந்து அவள்பிதா அக்னிஸாக்ஷியாகப்ருகுவுக்கு தானம்செய்தார். அவள் குழந்தையாகயிருக்கும்போது உனக்குக் கொடுப்பதாகச் சொன்னார் என்றான். உடனே ராக்ஷஸன் பன்றிவேஷம்போட்டுக்கொண்டு அவளைத் தூக்கிச்சென்றான். அவள் கர்ப்பத்தில் இருந்து ஓர் குழந்தை நழுவிவிழுந்தது. ஆதலால் அதற்குச்யவனர் என்றுபெயர். அவர் பிறந்தஉடன் ராக்ஷஸன் அவர்தபோ மஹிமையால் பற்றி எறிந்தான். அக்ரமம் செய்தால் அது தான் கதி.

3. குழந்தையை மிரட்டுவதற்காகச் சொன்னது தானம் ஆகுமா? அக்னிசொன்னது பொய்தானே? பொய்சொல்லலாமா? குரு அக்கியைப்பார்த்து பொய் சொன்னதற்காக நீ எல்லாவற்றையும் புஜிப்பாய் என சபித்தார். ஆதலால் அசுத்தமான பிணம் மலம்எச்சில இலைமுதலியஎல்லாவற்றையும்அது எரிக்கிறது. பொய் சொல்வதனுலுண்டாகும் தீங்கைப்பார்த்தீர்களா? பொய் பெரும் பாவம்.

4. ச்யவனர் ஸுகன்னி என்பவளை மணந்தார். அவர்களுக்கு ப்ரமதிஎன்று ஓர் குழந்தை பிறந்தது. அது பெரிதாகி க்ருதாசி என்பவளைக் கல்யாணம் செய்துகொண்டது. இவர்களுக்குப் பிறந்தவர்தான் குருஎன்பவர். இவர் ப்ரமத்வரை என்ற கன்னிகையை மணக்க விரும்பினர். அவர் தந்தை விச்வாவஸு என்ற கந்தர்வன். தாய்மேனகை. தாய்தந்தைகள்இக்குழந்தையை பூமியில் விட்டுவிட்டனர். ஸ்தூலகேசர் என்ற ரிஷி அக்குழந்தையை வளர்த்தார். இவர் குருவின் இஷ்டப்படி அவருக்கு இக்கன்யகைக்கொடுக்க ஸம்மதித்தார். கல்யாணத்திற்கு நாள் பார்த்தாய்விட்டது. ஸத்பாத்ரமாக இருந்தால் யார்தான் பெண்ணைக் கொடுக்கமாட்டார்?

5. இதன் நடுவில் ப்ரமத்வரையை ஓர் பாம்புகடித்தது. அவள் இறந்தாள். இதை அறிந்து குரு வருத்தப்பட்டார். அழுதார். இவர் தந்தை தாயிடம் அன்புகொண்டவர். நித்ய கர்மாவை நியமத்துடன் செய்பவர். நற்குணமுள்ளவர். ஆதலால் இவர் கஷ்டப்படுவதைக்கண்டு தேவர்களுக்கு மனம் இரங்கியது.

ஓர் தூதனை அவரிடம் அனுப்பினார்கள். தூதன் அவரைப் பார்த்து உமக்கு இஷ்டமிருந்து உமது ஆயுஸில்பாதி கொடுத்தால் அவள் ஜீவித்து எழுந்திருப்பாள் என்றான். அப்படியே அவர் ஆயுஸில் பாதியை அவர் கொடுத்தார். அவளும்ஜீவித்தெழுந்தாள். நாம் நற்கருமாவைச்செய்து நல்லவனாயிருந்தால் தேவரும் நம்மிடம் ஆசைவைப்பார். நினைத்தகாரியம் கூடிவரும்.

6. குருவுக்கும் ப்ரமத்வரைக்கும் நல்ல சுபதினத்தில் விவாஹம் நடந்தது. க்ருஹஸ்தாச்ரமதர்மத்தை நன்றாக நடத்தி வந்தார். மனைவியிடம் அவள் நல்லகுணமும் ரூபமும் பாதிவ்ருத்யமும் உள்ளவள் ஆகலால் அவருக்கு அதிக ஆசை உண்டு. ஆசை கோபத்திற்கு காரணம். ஆசை மனைவியைக் கடித்த பாம்பு ஜாதியின்மேலேயே இவருக்கு கோபம் வந்தது. கோபம் வந்தால் தர்மம் அதர்மம் என அறிவரா? கண்ணில்பட்ட பாம்பை எல்லாம் அடிக்க ஆரம்பித்தார். இது பாபமில்லையா? அந்த ரிஷி மஹாதபஸ்வி ஆனதால் அவருக்கு பாபம்வராது. நாம் ஆசைக்கு இடங்கொடுத்தால் கோபம் மோஹம் முதலியன உண்டாகும். ஆதலால் அதற்கு இடமளிக்கக்கூடாது.

7. குருவினிடம் ஓர் தண்ணீர்பாம்பு அகப்பட்டுக் கொண்டது. அதைக் கொல்ல ஆரம்பித்தார். அது. ஐயா! என்னைக் கொல்லாதே. நீர்பாம்பால் யாருக்கு என்னதீமை? என்றது இதைக்கேட்டு ஆச்சரியப்பட்ட ரிஷி ஓ பாம்பே நீயார்? என் பாம்பானாய் என்றுகேட்டார். அது சொல்லிற்று. நான் ஸஹஸ்ரபாத் என்றப்ராமணன். எனது ஸ்நேகிதர் ககமர்என்றரிஷி ஒருநாள் அவர் அக்னிஹோத்ரம் செய்துக்கொண்டிருந்தார். கர்மாவில் புத்தியைச்செலுத்தி நான் வந்ததை அவர் பார்க்கவில்லை. அவர் மேல் பாம்பைப்போல் புல்லைத்திரித்து போட்டேன். பயந்து பிரக்ஞையற்று விழுந்தார்.

8. தெளிந்தெழுந்தார். எதிரில் சிரித்துப் பரிஹாஸம் செய்யும் என்னைப்பார்த்தார். கோபம் வந்துவிட்டது. நீ நீர் பாம்பாகப் போ என்று சபித்தார். உடனே வருத்தங்கொண்டு அவர் காலில்விழுந்து நமஸ்கரித்தேன் குற்றத்தை மன்னித்து சாபத்தை மாற்றும்படி வேண்டினேன். ஸாதுக்களுக்கு கோபம் ஏது? உடனே மன்னித்தார். ப்ருகுவம்சத்தில் குரு என்றொருவர் பிறப்பார். அவரைப் பார்த்தவுடன் சாபம் நீங்குமென்றார். நீர்

தான் குரு என் சாபம் நீக்கிற்று என்றார். ஸஹஸ்ரபாத் என்பவர்

9. மேலும் அந்த ரிஷி குருவைப்பார்த்துச் சொன்னார். ஸ்வாமி! குற்றமுள்ளவரை அரசன் சிக்ஷிப்பான். அவன்தவறினால் அவனையும் குற்றவாளியையுங்கடவுள்சிக்ஷிப்பர். சிக்ஷிப்பது க்ஷத்ரியதர்மம் பொறுமைகபடமில்லாமை அஹிம்ஸைபொய்சொல்லாமை வேதத்தை மறவாமலிருப்பது, இது ப்ராமணன் தர்மம். ஸ்வதர்மத்தை விடக்கூடாது. பரதர்மத்தைத் தொடக்கூடாது. அஸ்தீகர் ஜநமேஜயன் ஸர்ப்பயாகத்தில் விழுந்து சாகும் பாம்புகளைக் கண்டு வருத்தங்கொண்டார் தயையால் வார்த்தைசொல்லி யாகத்தை நிறுத்தினார். என்றார்.

10 எல்லா மறிந்தவராயிருந்தாலும் குரு ஒரு கோபத்தினால் இதைமறந்தார். அவர் சொன்னவுடன் இதை ஏற்றுக்கொண்டார். நாம் நமக்கென்ன ஒருவர் சொல்வது? என்று சொல்லக்கூடாது. நியாயமாயிருந்தால் குழந்தைசொன்னாலும் கிளிசொன்னாலும் அதை ஏற்கவேண்டும். வீண்விளையாட்டால் வந்த வினையைப் பார்த்தீர்களா?

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

சொன்னபடிநடத்தலே மேல். 25உ மதுரை ஸம்ஸ்கிருதகலாசாலையில் ஸத் ஸபையின் ஆகாவில் ஸதாசாரம் குருபக்தி என்பவைகளைப்பற்றி உபன்யாஸம் நடந்தது. மாணவரும் மற்றவரும்கூடி கேட்டனர். பலஸம்ஸ்கிருத கலாசாலைகளில் ஆங்கிலங் கற்கும் மாணவரைப்போல் நடைஉடை பாவனைகளை நம் சிறுவர் ஆவலுடன் கைப்பற்றுகின்றனர். கல்வியைமாத்திரம் கற்று ஆசாரத்தை ஆதரிப்பதில்லை. ஆசாரமில்லாதவனை வேதமும் சுத்தப்படுத்தாதென ஸ்மிருதிகூறுகின்றது. ஸதாசாரத்தில் சிறந்த மாணவனுக்கு சென்னை ஸமஸ்கிருத கலாசாலையில்நமது ஸ்ரீபாமாசார்யாள் ஓர் தங்கப்பதக்கம் பரிசளிக்கிறார்கள். ஸம்ஸ்கிருத மாணவர் ஸதாசாரத்தை அவலம்பிப்பாராக.

திருந்துவரா? 27உமுதல் சென்னைக்கருகிலுள்ள வேலூர் ஸ்ரீஜகத்குருவின் பாததூளிக்குப்பாத்ரமாயிருக்கிறது. ப்ரதிதிநம்

ஸ்ரீபரமாசார்யாளது முகாரவிந்தத்திலிருந்தும், பல பண்டிதர்கள் மூலமும், பற்பல மதோபன்யாஸங்கள் நடக்கின்றன. சிலர் சென்னையிலுள்ள துராசாரத்தை நாகரீகமென இவ்வூரில் அதிக மாகப்பற்றுகின்றனர். இனி அவ்வூர் மதாபிமானத்துடன்சீர் திருந்துமென நம்புகிறோம். ஸ்ரீமஹாசார்யாளது அருளுக்குப் பாத்திரமான ஆஸ்திகரைப் போற்றுகிறோம்.

யோகமஹிமை. 2௨ கல்கத்தாவில் ஆந்த்ரயோகி ஒருவர் ரஸாயன ஆராய்ச்சிசாலையில், அக்னித்ராவகம், விஷமருந்து, ஆணி, கண்ணாடித்துண்டு, முதலியவைகளைப் புஜித்து, ஒருவிதச்ரமமும் இல்லாமலிருக்கிறார். பல விக்ஞான சாஸ்திரிகள் இதைக்கண்டு ப்ரமித்து அவர் குடலினுள்ளே படம் பிடித்து பார்த்தனர். சென்றவஸ்துக்கள் ஜீரணமாவதைக்கண்டு ஆச்சர்யமடைந்தனர். இவ்வளவு அநுபவபூர்வமாகக்காட்டியும் நமது ஸன்மார்க்கத்தில் பலர் நம்பிக்கை கொள்வதில்லை. இனியேனும்நம்புவார்?

இருவரும் வாழ்க! பாண்டிச்சேரியில் ஓர் தார்மிகர் ஸ்ரீவரத ராஜர் ஆலயத்தில் ஜீர்ணோத்தாரண கைங்கர்யம் செய்தார். அது பூர்த்தியானதும் ஸம்ப்ரோக்ஷணம் விசேஷமாக நடந்தது. ததீ யாராதனமும் ஆயிரக்கணக்கான த்ரவ்யயம்செய்து நடத்திவைக் கப்பட்டது. அதே ஊரில் மற்றோர் தார்மிகர் பழய குளத்தை நன்றாக சீர்திருத்திக்கட்டினார், ஸம்ப்ரோக்ஷண தினத்தன்றிரவு ஸ்ரீவரதராஜர் கருடவாஹநாரூடராகஎழுந்தருளி அந்ததடாகத்தில் தெப்ப உத்ஸவத்தை நடத்தினர். இதுமுற்றிலும் பொருத்தமான வைபவம். இரண்டுதார்மிக ச்ரேஷ்டர்களும் தாம்படைத்தபயனை அடைந்துஉலக நிதர்சனமானார்கள். ஸ்ரீ வரதராஜனது இரண்டு கடாக்ஷமும் இருவர் இடமும் பூர்ணமாகவிழும் என்பதில் ஆக்ஷேபமென்ன?

ஸதுபதேசம்:—4௨ முதல் 13௨வரை மதுரை தர்மசாஸ்த் ஸபையினுதரவில் கீதாசாரத்தைப்பற்றி உபன்யாஸம் நடக்கிறது. 6௨ சென்னை ஸ்ரீபாஷ்யகாரஸித்தாந்தவர்த்தனியெனும் ஸம்ஸ்கி ருதகலாசாலையில் விநயம் என்பதைப்பற்றி ஓர்உபன்யாஸம்ஸம்ஸ்கி ருதத்திலேயே நடந்தது. 5 சென்னை ஸம்ஸ்கிருத ஸபையில் ஸ்ரீ அநந்தாசார்ஸ்வாமி ராமாயணத்தில் பாலகாண்டம் வால்மீகி எழுதியதல்ல என ஸம்ஸ்கிருத உபன்யாஸம் செய்தார்.

மற்றுமோர் தர்மம்:—படித்துறைக்கட்டுதல் முதலிய தர்மத்தைச்செய்து கும்பகோணத்திலும் தென்னாட்டிலும் கீர்த்திபெற்றவர் ஸ்ரீமான் சுந்தரமய்யர். கும்பகோணம் கடைத்தெருவிலுள்ள ஆஞ்சநேயர் ஆலய ஜீர்ணோத்தாரணம்செய்ய பாலாலயம் செய்திருப்பதைக்கேட்க ஸந்தோஷமுண்டாகும், தர்மத்திற்காக செலவிடும் தநம் அமோகமாக விருத்தியாகி அடுத்த பிறவியில் அபரிமிதமான ஸுகத்தைக்கொடுக்கும். இவரதுசெயல் எல்லோராலும் போற்றத்தக்கது. மற்றவியாபாரிகள் இதிலிருந்து தாங்கள் ஸம்பாதித்ததில் ஏகதேசத்தையாவது தர்மத்தில் செலவிட வேண்டுமென உணர்வரோ?

வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸபை.—5உ சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் ஷ சபை ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீமான் எம் கே ஆசார்யர் தலைவர். ஸ்ரீமான்களான வாவிள்ள வெங்கடேச்வர சாஸ்திரிகளும் ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மாவும உபதலைவர்கள் ஸ்ரீ மான்களான ஆர். ஸுப்ரஹ்மண்ய அய்யரும டி. எஸ். ராமசந்திரய்யரும் கார்யதர்சிகள், பலர் அங்கத்தினராகச் சேர்ந்தனர். பகவத் ஸன்னிதாநத்தில் பிறந்த இச்சபை தீர்க்காயுஸாகவும் த்ருடகாத்ரத்துடனுமிருக்குமென நம்புகிறோம். பலஸபைகள் பாலாரிஷ்டத்திற்குப் பாத்ரமாகி இருப்பிடம் தெரிவதில்லை. கல்கத்தா ஸபைக்கு ப்ரதிநிதி அனுப்ப அடுத்தவாரம் அதேவிடத்தில் இச்சபைகூடும்.

ஸ்ரீப்ருஹ்மபுராணம்:—சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் ப்ரபவ வருஷம்முதல் பாகவதம், பாத்மபுராணம், ப்ருஹ்மாண்டம், ப்ருஹ்மவைவர்த்தம் முதலிய புராணங்களும், பகவத்கீதையும் உபன்யஸிக்கப்பட்டுவந்தது. ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளது அநுக்ரஹத்தால் ஸ்ரீஜகத்குரு ஸந்நிதாநத்தில் ப்ரதி தினம் மாலை ஒருமணி ஸமயம் நடந்தவண்ணமாயிருக்கிறது. 9உ மாலை ப்ருஹ்மபுராணம் ஆரம்பிக்கப்படும். பதினெட்டு புராணங்களையும் கேட்க வேண்டுமென்பது பக்தர்களது அவா. ஸ்ரீஜகத்குரு க்ருபையால் நடைபெறுமென நம்புகிறோம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.